செ.வெ.எண் : 272/2019 நாள் : 02.04.2019

# " தேசத்தலைவர்களை தேர்ந்தெடுக்கும் பணி நமது விரல் நுனியில் "
# மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
# மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ராமன்புதூர் சந்திப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அண்ணா பல்கலைகழக பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு 100 சதவீதம் வாக்களிக்க ஏதுவாக " **தேசத்தின் எதிர்நோக்கு உனது விழியில், தேசத்தின் தீர்ப்பு உனது விரல் நுனியில்** " போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி தேர்தல் விழிப்புணர்வு மனித சங்கிலியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.04.2019) துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் அனைவரும் தவறாது ஏப்ரல் 18 அன்று 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும். கடந்த 2014-ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் நமது மாவட்டத்தில் வாக்கு பதிவு மிகவும் குறைவாக இருந்தது. இந்த ஆண்டு மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் மக்கள் நலனை கருத்தில் கொண்டு நல்ல சமுதாயத்தை உருவாக்க, தேசத்தலைவர்களை தேர்ந்தெடுக்க உங்கள் விலைமதிப்பற்ற வாக்குகளை தவறாது செலுத்த வேண்டுமதொடர்ந்து விடுமுறை நாட்களாக இருப்பதால் மாணவ, மாணவியர்கள் சுற்றுலா சென்றாலும், ஜனநாயக கடமையினை நீங்கள் தவறாது நிறைவேற்றிட வேண்டும். விடுமுறை முடிந்து கல்லூரிக்கு திரும்பும் போது உங்கள் விரலில் வாக்களித்தற்கான மை இருக்க வேண்டும். குறிப்பாக வாக்களிப்பதை பெருமையாக நினைக்க வேண்டும். வாக்களிக்காமல் இருப்பது நம்மை நாமே குறைத்துக்கொள்ளும் செயலாகும். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக, **" தேசத்தலைவர்களை தேர்ந்தெடுக்கும் பணி நமது விரல் நுனியில் "** " **தேசத்தின் எதிர்நோக்கு உனது விழியில், தேசத்தின் தீர்ப்பு உனது விரல் நுனியில்** " போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி தேர்தல் விழிப்புணர்வு மனித சங்கிலியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து , ராமன்புதூர் சந்திப்பில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டு வில்லைகளை தனியார் ஆட்டோக்களில் ஒட்டினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், சார் ஆட்சியர் (நாகர்கோவில்) திரு.பா.விஷ்ணு சந்திரன் இ.ஆ.ப., பல்கலைகழக பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர். ஸ்ரீரங்கராஜன், நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.ஜஸ்டின் தனராஜ், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.